2013 மார்ச் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், என்னுடைய தொகுதியில், சங்ககிரி பேரூராட்சி, வார்டு எண் 6 மற்றும் வார்டு எண் 10–ல் உள்ள இரண்டு நியாய விலைக் கடைகளிலும் 1,600–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகளுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகம் செய்யும்போது, அடிக்கடி பல பிரச்சினைகள் வருவதால் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மேற்கண்ட இரண்டு நியாய விலைக் கடைகளையும் இரண்டாகப் பிரித்து, அத்தியாவசியப் பொருட்கள் சிரமமின்றிக் கிடைக்க ஆவன செய்வாரா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

55—

அணை கட்டுதல்

***2717—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேப்பனஹள்ளி தொகுதி, சிங்கிரிப்பள்ளி கிராமம், நாச்சிக்குப்பம் ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2013 மார்ச் 25

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தளர்வுறாத துணிவு, அசையாத உறுதி, திடமான முடிவு, தீர்க்கமான நடவடிக்கை ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள தன்னிகரில்லா தமிழ்நாடு முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) காவிரி எங்கே கானல் நீர் ஆகிவிடுமோ என்று எண்ணிக்கொண்டிருந்த தமிழக மக்களின் வயிற்றிலே பால் வார்த்த அன்புத் தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ரூ.2,185 இலட்சம் திட்ட மதிப்பீடு தயார் செய்து, இதில் 57.63 ஏக்கர் நிலம் வனப் பகுதியில் இருப்பதால், வனப் பகுதி நிலத்தைக் கையகப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவரிடம், நிலம் கேட்டு பரிந்துரை அனுப்பப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதி உள்ளடங்கிய வேப்பனஹள்ளி ஊராட்சி ஒன்றியம், மணவாரன்பள்ளி ஊராட்சியை ஒட்டியுள்ள, கர்நாடகம், ஆந்திரம் ஆகிய இரு மாநிலங்களின் எல்லைப் பகுதியில் உள்ள மலைப் பிரதேசத்தில் உருவாகி, தமிழக எல்லைக்குள் வருகிற நதிதான் சிங்கிரிப்பள்ளி, நாச்சிக்குப்பம் அருகில் ஓடும் மார்க்கண்டேயா ஆறு மேற்படி ஆற்றின் குறுக்கே அணை கட்டினால், நாச்சிக்குப்பம், சென்னதந்தரம், நாராயணஹள்ளி, வேப்பனஹள்ளி, பெரியகோட்டப்பள்ளி, எம்.சி.பள்ளி ஆகிய 15 ஊராட்சிகளுக்குட்பட்ட 100–க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயனடையும். 5 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலங்கள் பயன்படக்கூடிய வகையில் ஆற்றின் குறுக்கே அணை கட்டப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2013 மார்ச் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி, ஆலங்குளம் தொகுதிகளுக்குட்பட்ட ராம நதியின் உபரி நீரை அதன் உப நதியான ஜம்புநதி பாசனப் பகுதிகளுக்குக் கொண்டு செல்ல நாராயணபேரி கால்வாய் ஏற்படுத்த வேண்டும். இக்கால்வாய்மூலம் நாராயணபேரி, கைகொண்டார், வெள்ளாளன், வடக்கு மாத்தூர், தெற்கு மாத்தூர் ஆகிய குளங்கள் பாசன வசதி பெறும் என்பது அனைவருக்கும் தெரியும். ஓராண்டில் இப்பகுதியிலுள்ள குளங்கள் பெருகினால், 3 ஆண்டுகளுக்கு நிலத்தடி நீர் மட்டம் குறையாமல் இருக்கும். இந்தக் கால்வாய்க்காக ரூ.8.87 கோடியில் திட்டம் தயாரிக்கப்பட்டு, தற்போது சென்னை முதன்மைப் பொறியாளர் அலுவலக திட்ட நடைமுறைப் பிரிவின் பரிசீலனையில் உள்ளது. தற்போது இத்திட்ட மதிப்பீடு ரூ.10 கோடியாக இருப்பதாக நான் அறிகிறேன். எனவே, இந்தத் திட்டத்தை விரைவுபடுத்தி, இப்பகுதி மக்களின் நீண்டநாளைய கோரிக்கையை நிறைவேற்ற, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு ஆவன செய்யுமா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனையில் உள்ளது என்றும், அதன் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, வருகின்ற நிதியாண்டிலே செயல்படுத்தப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.